Judicial Form No.53

(See Rule 43)
DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**
**எஸ்.டி.சி. எண்.186/2020**
**2023-ம் ஆண்டு ஜுலை மாதம் 26-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின்**
**அ.சா. 9 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி)**
**திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 9 | தொழில் | - | இரண்டாம்நிலை பெண் காவலர்-714 |
| பெயர் | - | கலைவாணி | வட்டம் | - | |
| த/பெ | - | மகேந்திரன் | சமயம் | - | |
| கிராமம் | - | | வயது | - | |
| சாதி | - | | | | |

26.07.2023

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை** :

1. நான் தற்போது தர்மபுரி மாவட்டத்தில் இரண்டாம் நிலை பெண் காவலராக ஆயுதபடையில் பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கு சமயத்தில் வால்பாறை காவல் நிலையத்தில் பணிபுரிந்தேன். 23.02.2020 அன்று காலை 07.50 மணிக்கு காவல் நிலையத்திற்குள் சென்றேன். 08.00 மணிக்கு பாரா மாற்றிவிட்டார்கள்.

2. SI உதயசூரியன் அவர்கள் நகராட்சியில் உள்ள ஒரு கறிக்கடை பக்கத்தில் கேஸ் சம்பந்தமாக விசாரிக்க போயிட்டு வரேன் என்று சொன்னார். ஸ்டேஷனில் வெள்ளைச்சாமி என்பவரை விசாரித்து கொண்டு இருந்தார்கள். சுமார் 09.00 மணிக்கு SI சார், வெள்ளைச்சாமி இருவரும் வெளியே போனார்கள்.

3. ஸ்டேஷனில் பாராவில் நான் மட்டும் இருந்தேன். என்னுடன் முஜிப், சுரேஷ்பாபு காவலர்கள் அதற்கு பிறகு உள்ளே வந்தார்கள். சுமார் 11.00 மணிக்கு உதயசூரியன் சார் ஸ்டேஷனுக்கு வந்தார். ஆஜர் எதிரியான பிரபு உடன் ராணி, செந்தில் ஆகியோர் வந்தார்கள்.நான் பிரபுவிடமும் ராணியிடமும் எதற்காக வந்தீர்கள் என்று விசாரித்தேன்.

4. SI சாரை பார்க்க வேண்டும் என்று சொன்னதால் உள்ளே போக அனுமதித்தேன். SI சார் வெள்ளைச்சாமி கொடுத்த புகார் சம்பந்தமாக இவர்கள் மீது வழக்கு பதிவு செய்துள்ளதாக பேசிக்கொண்டிருந்தார். ஆஜர் எதிரியான பிரபு என் மீது புகார்

கொடுத்தால் நீங்கள் FIR போட்டு விடுவீர்களா என்று SI உதயசூரியன் சாரிடம் கேட்டார். அதன் பிறகு SI சார் முன்னாடியுள்ள வராண்டாவிற்கு வந்தார்.

5. ஆஜர் எதிரி SI உதயசூரியன் சாரை அடித்து கீழே தள்ளிவிட்டதை நான் உள்ளே இருந்து பார்க்கிறேன். சாரை அடிக்கிறாங்க என்று சொல்லி முஜிப், சுரேஷ்பாபுவிடம் சொல்லி நாங்கள் 3 பேரும் வெளியே வருகிறோம். நாங்கள் வந்து பார்த்த போது ஆஜர் எதிரி உதயசூரியன் சாரின் வயிற்றின் மேல் நிற்கிறார். நாங்கள் 3 பேரும் சேர்ந்து அவரை விலக்கிவிட்டோம்.

6. என்னைக்கு இருந்தாலும் யூனிபாமேடு வைத்து கொல்லாமல் விடமாட்டேன் என்று கத்திவிட்டு ஆஜர் எதிரியும், செந்திலும் ஓடி விட்டார்கள். வெள்ளைச்சாமி என்பவர் கேட்டுக்கு பக்கத்தில் இருந்து இதைப் பார்த்து விட்டு உள்ளே வந்து SI உதயசூரியன் சாரை ஆஸ்பத்திரியில் அட்மிட் செய்கிறார். அதன் பிறகு வழக்கு பதிவு செய்கிறார்கள். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. அன்றைக்கு ரோல்கால் நடந்ததா அதில் நான் கலந்து கொண்டேனா என்றால் இல்லை. அன்று ரோல்கால் நடக்கவில்லை. வெள்ளைச்சாமி 08.00 மணிக்கு SI உதயசூரியனிடம் புகார் கொடுத்தார். வெள்ளைச்சாமியும் SI உதயசூரியனும் இருவரும் எத்தனை மணிக்கு வெளியில் சென்றார்கள் என்றால் 09.30 மணி.

2. 08.00 மணி முதல் 09.30 மணி வரை புகார்தாரர் வெள்ளைச்சாமியும், SI-யும் பேசிக்கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். முஜிப்மும், சுரேஷ் சாரும் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் நான் போய் கொஞ்ச நேரத்தில் முஜிப் சார் வந்தார் அதன் பின் சுரேஷ் வந்தார். நான் போன போது காவல் நிலையத்தில் SI சார் தான் இருந்தார் என்றால் சரிதான்.

3. SI விசாரணைக்கு சென்று விட்டு எத்தனை மணிக்கு திரும்பி வந்தார் என்றால் 11.30 மணிக்கு வந்தார். அவர் மட்டும் தான் வந்தார் வெள்ளைச்சாமி உடன் வரவில்லை. பிரபு எத்தனை மணிக்கு வந்தார் என்றால் 11.00 மணிக்கு வந்து என்னிடம் வந்து SI சார் எப்ப வருவார் என்று கேட்டுவிட்டு வெளியிலேயே இருந்தார். SI சார் வந்தவுடன் உள்ளே வந்தார்.

4. என்ன விஷயம் என்று அப்போது கேட்டேன் என்றால் இல்லை. நான் அமர்ந்திருந்த இடத்திற்கும் SI அமர்ந்திருந்த இடத்திற்கும் 10 அடி துாரம் தான் இருக்கும். SI அமர்ந்திருந்த இடத்திற்கும் வரண்டாவிற்கும் 15 அடி துாரம் தான் இருக்கும். அந்த சமயத்தில் SI யூனிபாமில் தான் இருந்தார். இந்த வழக்கில் எத்தனை எதிரிகள் என்றால் ஆஜர் எதிரியும், செந்திலும்.

5. அவருடைய மனைவியை இந்த வழக்கில் சேர்த்தார்களா என்றால் அவர் எதுவும் பேசவில்லை. முதலில் யார் ஓடினார்கள் என்றால் செந்தில் அதன் பிறகு பிரபு. யாரை

அவர்கள் தள்ளிவிட்டு ஓடினார்கள் என்றால் விலக்கும் போது பிடித்திருந்தவர்களை தள்ளிவிட்டு ஓடினார்கள் என்னை தள்ளிவிடவில்லை. அந்த சமயத்தில் காவலர்களை தவிர வேறு யாராவது இருந்தார்களா என்றால் நான் உதயசூரியன் சார் மற்ற இரண்டு காவலர்களை தவிர யாரும் இல்லை.

6. என்னை காவல் ஆய்வாளர் அன்றே சாயங்காலமே விசாரித்தார். என்னுடை பெயர் மட்டும் தான் கேட்டார் என்னுடைய அப்பா பெயர் கேட்கவில்லை நானும் சொல்லவில்லை. எதிரியை பிறகு எத்தனை மணிக்கு பிடித்து வந்தார்கள் யார் கூட்டி வந்தார்கள் என்றால் SI சார் அந்த SI சார் பெயர் மறந்து விட்டது. ஆஜர் எதிரி நல்லகாத்து போகும் வழியில் பெட்ரோல் பங்க் நடத்தி வந்தார். அங்கிருந்து கூப்பிட்டு வந்தார். என்னை விசாரித்த காவல் ஆய்வாளர் பெயர் பாலமுருகன்.

7. எதிரியை காடம்பாறை காவல் நிலையத்திலிருந்து ஆய்வாளர் பாலமுருகன் தான் கூப்பிட்டு வந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் சொல்லுவது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் மேல் அதிகாரி சொன்னதின் பேரில் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் இல்லை நான் கண்ணால் பார்த்தேன்.

**மறுவிசாரணை**

இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

District Munsif cum Judicial Magistrate, Valparai
(ஒப்பம்)திரு.ரெ.செந்தில்குமார்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.